# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதி (30.04.2020) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : - திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள் .1</u>** . இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த திருமதி. கு.ஆராயி, என்பவர் 17.04.2019 அன்று இறந்துவிட்டார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு அவரது வாரிசுதாரர் திரு. கு. அஜித்குமார் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி.கு. ஆராயி (லேட்) , துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 2014–2019 முதல் சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 13.01.2014 |
| 2 | இறந்த நாள் | 17.04.2019 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 72 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 3/2019 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.5040/- |
| 6 | 2014/2019 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.794/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | இல்லை |
| | மொத்தம் | ரூ.5834/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி, திருமதி.கு.ஆராயி (லேட்), துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 5040/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 794/– ம் சேர்த்து மொத்தம் ரூ.5834 /– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந,க, எண். 948/2020/பி2**

**தீர்மான எண் : 044 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.2.</u> இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.G.ஆதிமூலம் (லேட்) என்பவர் 02.02.2020 அன்று இறந்துவிட்டார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு அவரது வாரிசுதாரர் திரு. ஆ. வீரவேல் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. G.ஆதிமூலம் (லேட்) , துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1990–2020 சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 15.02.1990 |
| 2 | இறந்த நாள் | 02.02.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | **148 த**வணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 4/2002 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 15.02.1990 முதல் 02.02.2020 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.34508/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | இல்லை |
| | **மொத்தம்** | ரூ.37,468/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி, திரு. G.ஆதிமூலம் (லேட்), துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ.34,508/– ம் சேர்த்து மொத்தம் ரூ.37,468 /– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க. எண். 927/2020/பி2**

**தீர்மான எண் : 045 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/ AE 5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.30000/–ஐ நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பழுதுகள் விபரம்</u>

1. AC கேஸ் மாற்றி சர்வீஸ்.
2. பேன் புதியதாக பொருத்த வேண்டும் .
3. எக்ஸ்ட்ரா லைட் இரண்டு புதியதாக பொருத்த வேண்டும் .
4. வாட்டர் கிரிஸ் சர்வீஸ்.
5. சைடு இரண்டு பக்கம் புட்ரஸ்ட் சரி செய்தல்.
6. பின் பக்க பம்பர் மாற்ற வேண்டும் .

அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதிக்கலாம்
2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1249/2020/இ1)**

**தீர்மான எண் : 046 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.4..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் பொது நிதியின் கீழ் தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . **02.04.2020** ன்படி 17.04.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக ஈப்பு வாகனம் TN-31/AE 5944 க்கு பழுது பார்த்தல் பணி | 30000/- | ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் DSN நகர் , காரமணிக்குப்பம் , | ரூ.**29618/–** |
| | | | விஜியலட்சுமி ஆட்டோமெபைல்ஸ் கடலூர் , | ரூ.**32686/–** |

<u>அலுவலகக்குறிப்பு : –</u>
1. வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.**29618/–** விலைப்புள்ளிஅளித்துள்ள ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் , காரமணிக்குப்பம் , அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1249/2020/இ1)**

**தீர்மான எண் : 047 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.5..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் TURIP – **2018–19** திட்டத்தின் கீழ் ரூ.**215.00** இலட்சத்திற்கு சாலை பணிகள் தற்போது நடை பெற்று வருகிறது . இது சமயம் சாலையின் குறுக்கே மழை நீர் செல்வதற்கு தேவையான 300 MM சிமெண்ட் பைப்புகள் கீழ் கண்டவாறு பதிக்க வேண்டியுள்ளது .

| வரிசை எண் | இடம் | மீட்டரில் |
|---|---|---|
| 1 | பாபா நகர் சாலை | 12 |
| 2 | லட்சுமி நாராயணன் நகர் | 6 |
| 3 | நர்மதா நகர் | 12 |
| 4 | தனலட்சுமி நகர் | 12 |
| 5 | தேவநாதன் நகர் | 6 |
| 6 | சுல்தான் பேட்டை | 6 |
| 7 | மாருதி நகர் | 6 |

மேலே கண்ட இடங்களில் தேவையான சிமெண்ட குழாய் அமைக்க TURIP – **2018–19** திட்ட மதிப்பீட்டில் இல்லாததால் இதனை பொது நிதியில் செய்து முடிக்க உத்தேச செலவு ரூ.**93000/–** ஆகும் . இது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :–மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1280/2020/இ1)**

**தீர்மான எண் : 048 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

மன்றப்பொருள்.6.. தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 32 / செமதொ/ 06.02.2020 , / செமதொ/ 26.02.2020 , 34/ செமதொ/ 10.02.2020 & 35 / செமதொ/ 10.02.2020 படி விளம்பரம் செய்ததில் கீழ் கண்ட நாளிதழ்க்கு விளம்பரத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தமிழ் முரசு (Kal publication (p) Ltd) | 15000/– |
| 2 | தினத்தந்தி | 22260/– |
| 3 | தினகரன் (Kal publication (p) Ltd) | 16800/– |
| 4 | மாலை மலர் | 17220/– |

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் . 1275/2020/இ1)
**தீர்மான எண் : 049 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

மன்றப்பொருள்.7.. தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் " தினமலர் " நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ.16800/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .
அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் . 1279/2020/இ1)
**தீர்மான எண் : 050 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

மன்றப்பொருள்.8.. நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுத்திடும் பொருட்டு GREEN AGRO ENVIRONMENT SERVICES, மதுராந்தகம் என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்கண்ட தேவையான கிருமிநாசினிகள் சப்ளை செய்யப்பட்டது.

1. PPE KIT – 150 செட்

அதற்கான பட்டியல் தொகை ரூ.1,51,673/– ஆகும். தொற்றுநோய் தடுப்பு பணிக்காக இத்தொகையினை செலவு செய்யப்பட்டது. எனவே தமிழ்நாடு நகராட்சிகளின் மாவட்ட சட்டம்–1920 பிரிவு –15ன் கீழ் இச்செலவினத்தை மன்றதின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :மன்றம் பதிவு செய்யலாம்
**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் : 051 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

மன்றப்பொருள்.9... நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுத்திடும் பொருட்டு திருபத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் மற்றும் கூட்டுறவு சங்கம், திருப்பத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்கண்ட தேவையான கிருமிநாசினிகள் சப்ளை செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1 | லைசால் | – | 2500லிட்டர் |
| 2 | ஹேண்ட் வாஸ் | – | 300 லிட்டர் |
| 3 | முகவுறை (ஒரு முறை பயன்படுத்தல்) | – | 5000 எண்ணிக்கை |
| 4 | பவர் ஸ்பிரேயர் | – | 6 எண்ணிக்கை |

அதற்கான பட்டியல் தொகை ரூ.6,71,216/– ஆகும். தொற்றுநோய் தடுப்பு பணிக்காக இத்தொகையினை செலவு செய்யப்பட்டது. எனவே தமிழ்நாடு நகராட்சிகளின் மாவட்ட சட்டம்–1920 பிரிவு –15ன் கீழ் இச்செலவினத்தை மன்றதின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :மன்றம் பதிவு செய்யலாம்
**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் : 052 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.10.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுத்திடும் பொருட்டு ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்கண்ட தேவையான கிருமிநாசினிகள் சப்ளை செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1 | லைசால் | – | 1000லிட்டர் |
| 2 | ஹேண்ட் சானிடைசர் | – | 10 லிட்டர் |
| 3 | முகவுறை (ஒரு முறை பயன்படுத்தல்) | – | 1000 எண்ணிக்கை |
| 4 | பிளீச்சிங் பவுடர் | – | 3000 கிலோ |
| 5 | நீர்த்த சுண்ணாம்பு | – | 10000 கிலோ |

அதற்கான பட்டியல் தொகை ரூ.4,68,880/– ஆகும். தொற்றுநோய் தடுப்பு பணிக்காக இத்தொகையினை செலவு செய்யப்பட்டது. எனவே தமிழ்நாடு நகராட்சிகளின் மாவட்ட சட்டம்–1920 பிரிவு –15ன் கீழ் இச்செலவினத்தை மன்றதின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 053 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.11.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் எதுவும் வராமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டிடும் வகையில் நகர் பகுதியில் வாழும் பொது மக்களிடம் கொரோனா நோய் எவ்வாறு பரவுகிறது என்பது குறித்தும், இதனை எவ்வாறு பராமல் தடுத்திட நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், துண்டு பிரசுரங்கள் பொது மக்களிடம் வழங்கவும், பொது இடங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டவும் DBC பணியாளர்கள் அவசர அவசிய பணிக்கு 20 பணியாளர்கள் தேவைப்படுவதால் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு தினக்கூலி ரூ.200/– வழங்குவதற்கும் பணியாளர்கள் கடந்த ஆண்டுகளை போலவே குறிஞ்சி மகளிர் சுய உதவிக்குழு மூலம் 20 பணியாளர்களை ஏப்ரல் / 2020 முதல் ஆகஸ்ட் /2020 முடிய ஐந்து மாதங்களுக்கு பணி அமர்த்தப்பட்டு தொற்று நோய் தடுப்பு பணிக்காக பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சம் ஆகும். இத்தொகை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 054 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.12.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுத்திடும் பொருட்டு பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் மக்கள் கூடும் பிரதான பொது இடங்களில் டிஜிட்டல் போர்டுகள் பாதுகாப்பான இடத்தில் மக்கள் பார்வைக்கு தெரிகின்றபடி பத்து இடங்களில் 10 X 10 அடி அளவு கொண்ட பிளக்ஸ்போர்டு பிரேம் தைத்து சரியான முறையில் சாரங்கள் அமைத்து அதில் பொருத்தம் செய்திட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.35000/– ஆகும். இதனை தமிழ்நாடு நகராட்சிகளின் மாவட்ட சட்டம்–1920 பிரிவு –15ன் கீழ் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றத்தின் பதிவுக்கு

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 055 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.13.</u>இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுத்திடும் பொருட்டு பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் மக்கள் கூடும் பிரதான பொது இடங்களில் டிஜிட்டல் போர்டுகள் பிரேம் தைத்து சரியான முறையில் சாரங்கள் அமைக்கப்படுவதற்கு 27.03.2020 இன்று ஏலம் கோரப்பட்டது. எனவே, ஏலத்தில் கலந்து கொண்ட மூன்று நபர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு,

| வ.எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி, | **3450/– (1 க்கு)** |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | |
| 2 | திருமதி.எஸ்.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | 3650/– ( 1 க்கு) |
| 3 | திரு.என்.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | 3500/– (1 க்கு) |

மேற்கண்ட வரிசை எண்.1ல் திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் என்பவர் குறைந்தபட்ச ஏலக் கேள்வி கேட்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 056 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.14.</u> இந்நகராட்சி பகுதியில் பொது மற்றும் சமுதாய கழிவறைகளின் நச்சுத் தொட்டிகளில் உள்ள கழிவு நீரை சுத்தம் செய்திட 30.03.2020 இன்று ஏலம் கோரப்பட்டது. எனவே, ஏலத்தில் கலந்து கொண்ட மூன்று நபர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு,

| வ.எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | 2300/– ( ஒரு நடைக்கு ) |
| 2 | திருமதி.எஸ்.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | 2450/– ( ஒரு நடைக்கு ) |
| 3 | திரு.என்.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | 2500/– ( ஒரு நடைக்கு ) |

மேற்கண்ட வரிசை எண்.1ல் திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் என்பவர் குறைந்தபட்ச ஏலக் கேள்வி கேட்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் : 057 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.15.</u> தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் **2017–18 , 2018–19** மற்றும் **2019– 20**ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் “இந்து தமிழ் ” in favour of “Cuddalore ADS” நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ **.17136/–** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 0985/2020/இ1)**

**தீர்மான எண் : 058 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.16.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்குகளில் கூடுதலாக உள்ள மின்மாற்றிகளில் On & Off சுவிட்ச் பாக்ஸ் புதியதாக **19** இடங்களில் பொருத்தும் பணிக்கு தோராய செலவினம் ரூ .26000/– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 1282/2020/இ1)**

**தீர்மான எண் : 059 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.17.** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்குகளில் கூடுதலாக உள்ள மின்மாற்றிகளில் On & Off சுவிட்ச் பாக்ஸ் புதியதாக 19 இடங்களில் பொருத்தும் பணிக்கு 08.04.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | Reliable Power System ,<br>22 , வண்டிப்பாளையம் ரோடு<br>கடலூர். | 28400 |
| 2 | Enoch Electricals ,<br>105 ,B குடிதாங்கி மெயின் ரோடு<br>நெல்லிக்குப்பம். | 25900 |
| 3 | Sri Mallika Electricals & Electronics,<br>1 , Police Line ,<br>Pantruti. | 27800 |

**அலுவலகக்குறிப்பு:** .1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Enoch Electricals , 105 ,B குடிதாங்கி மெயின் ரோடு நெல்லிக்குப்பம். அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**(ந.க.எண். 1282/2020/இ1)**

**தீர்மான எண் : 060 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான விலைப்புள்னளியை ஏற்க அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி